<u>அரசு செய்தி வெளியீடு 443</u> <u>13.6.2008</u>

# <u>2008–2009ஆம் ஆண்டு குறுவை நெல் கொள்முதல் விலை</u>

# <u>முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு</u>

**2008–2009ஆம் ஆண்டு காரீப் பருவத்திற்கு மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை சாதாரண ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 850 ரூபாய் என்றும்; சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 880 ரூபாய் என்றும் நிர்ணயித்துள்ளது. எனினும், விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று – உணவு பாதுகாப்பை உறுதி செய்யவும், நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுத்து ஊக்குவிக்கவும், 2008–2009ஆம் ஆண்டு குறுவை பருவத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 1000 ரூபாய் என்றும்; சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 1050 ரூபாய் என்றும் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.